**16 ஆகஸ்ட் 2026 பொதுக்காலம் 20ஆம் ஞாயிறு**

எசாயா 5:1, 6–7; உரோமையர் 11:13–15, 29–32;

மத்தேயு 15:21–28

**முன்னுரை**

அன்பானவர்களே நம்மைக் கைவிட மறுக்கும் தருணங்கள் வாழ்க்கையில் பல நேரங்களில் ஏற்படுவதுண்டு.

நோய்வாய்ப்பட்ட குழந்தையின் அருகில் தூக்கமின்றி இரவுகளைக் கழிக்கும் பெற்றோர்கள், வாழ்க்கையில் போராடும் நண்பனுக்கு உண்மையோடு உறுதுணையாக நிற்கும் தோழர்கள், ஆபத்துகாலங்களில் ஒருவரையொருவர் பாதுகாத்துக்கொள்ளும் சமுதாயம்

இத்தகைய அன்பு, பயத்தைவிட ஆழமான ஓர் ஆற்றலை வெளிப்படுத்துகிறது. கதவுகள் அனைத்தும் அடைக்கப்பட்டிருப்பது போல் தோன்றினாலும் அது தொடர்ந்து தட்டப்பட்டுக்கொண்டே இருக்கிறது.

இன்றைய நற்செய்தி, அத்தகைய விடாமுயற்சியுள்ள அன்பிற்கு மிகச் சிறந்ததொரு உதாரணத்தை நமக்குத் தருகிறது.

ஒரு கானானியத் தாய் தன் மகளுக்காக இயேசுவிடம் மன்றாடி வருகிறாள். மௌனத்தையும், வெளிப்படையான நிராகரிப்பையும் அவள் எதிர்கொண்டபோதிலும், விலகிச் செல்ல மறுக்கிறாள். தடைகளைவிட இறைவனின் இரக்கத்தையே அதிகம் நம்பும் துணிச்சலான விசுவாசமான அவளது அன்பால் அனைத்தும் மாறுகிறது.

இந்த நற்செய்தி நம் இதயங்களையும் விரிவுபடுத்துகிறது. கடவுளின் இரக்கத்தை மனித எல்லைகளுக்குள் பூட்டிவைக்க முடியாது. எதிர்பாராத மனிதர்களிடமும் இடங்களிலும் கூட விசுவாசம் உருவாக முடியும் என்பதையும், நாம் யூகிப்பதைவிட இறைவனின் இரக்கம் வெகுதொலைவு வரை சென்றடையும் என்பதையும்இயேசு மீண்டும் மீண்டும் நமக்கு வெளிப்படுத்துகிறார்.

ஆண்டவரின் திரு முன் நாம் கூடியிருக்கும்இந்த வேளையில், பிறருக்கு எதிராக நாம் குறுகிய எல்லைகளை அமைத்த தருணங்கள், கடவுளின் இரக்கத்தின் மீது நம்பிக்கை வைக்கத் தவறிய நேரங்கள், ஜெபத்திலும் அன்பிலும் மிக விரைவாகச் சோர்வடைந்து விட்டுப்பட்ட தருணங்களை நினைத்துப் பார்ப்போம். அதற்காக இப்போது ஆண்டவரிடம் மன்னிப்பையும் அமைதியையும் மன்றாடுவோம்.

**மறையுரை**

சில ஆண்டுகளுக்கு முன்பு, 'சார்லி கார்ட்' என்ற சிறிய குழந்தை சம்பந்தப்பட்ட இதயத்தை நெகிழவைக்கும்கதையை உலகமே உற்றுநோக்கியது. கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த தன் குழந்தைக்காகப் போராடுவதை அவனது பெற்றோர் நிறுத்தவே இல்லை. மருத்துவ வல்லுநர்களே இனி எந்த நம்பிக்கையும் இல்லை என்று கூறியபோதும், அவர்கள் தொடர்ந்து சிகிச்சைக்காக முயற்சி செய்துகொண்டே இருந்தார்கள்.

அவர்களின் ஒவ்வொரு முடிவையும் அனைவரும் ஏற்றுக்கொண்டார்களா இல்லையா என்பது வேறு விஷயம், ஆனால் அவர்களின்அன்பின் வல்லமையை யாரும் உணராமல் இருக்க முடியாது. அன்பு மனிதர்களைச் சோர்வையும் தாண்டி விடாமுயற்சி செய்ய வைக்கிறது. வெறும் தர்க்கம் மட்டும்கைவிடச் சொல்லும் இடத்திலும் அன்பு தொடர்ந்து நம்பிக்கையோடு இருக்கிறது.

இன்றைய நற்செய்தியின் உணர்வுப்பூர்வமான உலகமும் இதுவே.

ஒரு ஏழைத் தாய் தன் மகளுக்காகக் கதறி அழுதபடி இயேசுவிடம் வருகிறாள். இங்கு ஒரு முக்கியமான காரியத்தைக் கவனியுங்கள்: அவள் வெறும், "என் மகள் மீது இரக்கமாயிரும்" என்று மட்டும் சொல்லவில்லை. "என் மீது இரக்கமாயிரும்" என்று கதறுகிறாள். அவளது மகளின் துன்பம், அவளது சொந்தத் துன்பமாகவே மாறிவிட்டது. அன்பு செலுத்தும் ஒவ்வொரு பெற்றோர் மனமும் இதை இயல்பாகவே புரிந்துகொள்ளும்.

குழந்தை வேதனைப்படும்போது, பெற்றோரும் வேதனைப்படுகிறார்கள்.

அதன்பின் நற்செய்தியின் அதிர்ச்சியளிக்கும் பகுதி வருகிறது. இயேசு மௌனமாக இருக்கிறார். பின்னர், தமக்குக் கொடுக்கப்பட்ட பணி இஸ்ரயேல் மக்களுக்கு மட்டுமே என்று கூறுகிறார். தொடர்ந்து, பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுவது பற்றிய உவமையைக் கூறுகிறார்.

இது கடுமையான வார்த்தையாகத் தொனிப்பதால் நமக்கு ஒரு சங்கடமான உணர்வு ஏற்படுகிறது. இந்த நற்செய்தியை முதன்முறையாக வாசிக்கும் பலருக்கு இது அதிர்ச்சியாகவே இருக்கும்.

ஆனால், ஒருவேளை அந்தச் சங்கடமே இங்கு மிக முக்கியமான பாடமாக இருக்கலாம். நற்செய்தி நமக்கு ஒரு செயற்கையான வழிபாட்டுக் காட்சியைக் காட்டாமல், இயல்பான மனிதச் சந்திப்பையே காட்டுகிறது. இந்தச் சவாலான சந்திப்பின் வழியே வெளிப்படுவது அந்தப் பெண்ணின் மகத்தான விசுவாசமே ஆகும்.

இயேசு இறுதியில் அவளிடம்: "அம்மா, உமது விசுவாசம் பெரியது!" என்கிறார்.

எவ்வளவு ஆச்சரியமான வார்த்தை! கிறிஸ்துவிடமிருந்து பெறக்கூடிய இதைவிடப் பெரிய பாராட்டு வேறு எதுவாக இருக்க முடியும்? இயேசு நம்மிடம் வந்து: "உன் விசுவாசம் பெரியது" என்று சொல்வதைக் கற்பனை செய்து பாருங்கள்! இதில் வியப்பான விஷயம் என்னவென்றால்: அந்தப் பெண் இஸ்ரயேல் குலத்தைச் சேர்ந்தவள்கூட அல்ல. அவள் ஒரு கானானியப் பெண், ஓர் அன்னியர், புறஇனத்தவர். இருப்பினும், நற்செய்தியில் இயேசு யாரையெல்லாம் பலமான வார்த்தைகளால் பாராட்டினாரோ, அந்தச் சிலரில் அவளும் ஒருத்தியாக மாறுகிறாள்.

அப்படியானால், நடைமுறையில் அவளது விசுவாசம் எப்படிப்பட்டது?

முதலாவதாக, அவள் தன் துன்பத்தை இயேசுவிடம் கொண்டுவருகிறாள்.

அவளது மகள் பேய்பிடித்துப் வேதனைப்படுகிறாள்; அந்தத் தாய் தன் துயரத்தோடு கிறிஸ்துவை நோக்கித் திரும்புகிறாள். இது கேட்பதற்கு எளிமையாகத் தோன்றினாலும், செய்வதற்குக் கடினமான ஒன்று. நோய், துக்கம், குடும்பப் போராட்டங்கள், ஏமாற்றம், மனச்சோர்வு அல்லது பயம் ஆகியவற்றால் மனிதர்கள் கடுமையாகப் பாதிக்கப்படும்போது, அவர்கள் கவலையிலும் அஞ்சும் எண்ணங்களிலும் சிக்கிக்கொள்ளக்கூடும். சில நேரங்களில் துன்பம் நம் பார்வையைக் குறுகலாக்கி, கடவுளைத் தெளிவாகப் பார்க்க முடியாதபடிச் செய்துவிடுகிறது.

ஆனால் இந்தத் தாய் விசுவாசத்தின் முதல் பாடத்தை நமக்குக் கற்றுத்தருகிறாள்: உங்கள் தேவையை இயேசுவிடம் கொண்டுவாருங்கள்.

எந்தத் துன்பமும் சிறியதல்ல; எந்தச் சூழ்நிலையும் நம்பிக்கையற்றதல்ல.

திடீரென வேலையை இழந்து மன உளைச்சலில் ஆழ்ந்த ஒரு மனிதனின் கதை உண்டு. தினமும் காலையில் அவர் தன் சமையலறை மேஜையில் அமர்ந்து, கட்டப்படாத கட்டணச் சீட்டுகளையே அமைதியாகப் பார்த்துக்கொண்டிருப்பார். ஒருநாள், அவருடைய சிறுமகள் அவர் காபிக் கோப்பைக்கு அருகில் ஒரு சிறிய வரைபடத்தை வைத்தாள். அதில் அவர்கள் குடும்பம் ஒரு பெரிய சிலுவையின் கீழ் கைகளைப் பிடித்துக்கொண்டிருப்பது போல வரையப்பட்டிருந்தது. கீழே அவள்: "அப்பா, இயேசு இன்னமும் நம்மோடுதான் இருக்கிறார்" என்று எழுதியிருந்தாள். அந்த எளிய குழந்தையின் நினைவூட்டல் அவருக்குள் ஏதோ ஒன்றை மாற்றியது. பிரச்சினைகள் ஒரே இரவில் மறைந்துவிடவில்லை, ஆனாலும் அவர் பின்னாளில் இப்படிச் சொன்னார்: "பாரத்தைத் தனியாகச் சுமப்பதை நான் நிறுத்திய நாள் அதுதான்."

பல விசுவாசிகள் இந்த அனுபவத்தை அறிந்திருக்கிறார்கள். நீங்கள் குணமடைய ஜெபிக்கிறீர்கள், ஆனால் எதுவும் மாறுவதில்லை.

அன்புகூர்பவர்களுக்காக ஜெபிக்கிறீர்கள், ஆனால் மேலுலகம் மௌனமாக இருப்பது போல் தோன்றும். வழிநடத்துதலுக்காக ஜெபிக்கிறீர்கள், ஆனால் இருள் மட்டுமே எஞ்சியிருக்கும். சில நேரங்களில் நம் ஜெபங்கள் வீட்டின் கூரையைத் தாண்டி மேலே உயர்ந்து செல்லவில்லையோ என்று தோன்றும் தருணங்களுண்டு.

கொல்கத்தாவின் புனித தெரசா (அன்னை தெரசா), கடவுளின் இருப்பை உணர்வுப்பூர்வமாக உணரமுடியாத நீண்ட ஆன்மீக வறட்சிக் காலங்களைப் பற்றிப் பேசியுள்ளார். இருப்பினும், அவர் ஏழைகளுக்குத் தொடர்ந்து உண்மையோடு தொண்டாற்றினார். விசுவாசம் என்பது எப்போதும் உணர்வுப்பூர்வமான ஒன்றல்ல; சில நேரங்களில் அது இறைவனின் மௌனத்திலும் விடாமுயற்சியோடு நிலைத்திருப்பதாகும்.

நற்செய்தியில் வரும் அந்தப் பெண்ணும் அதையே செய்கிறாள். அவள் காயப்பட்டு விலகிச் செல்லவில்லை.

கடவுள் தம்மை மறந்துவிட்டார் என்று அவள் முடிவு செய்யவில்லை. அவள் மீண்டும் கேட்கிறாள்: "ஆண்டவரே, எனக்கு உதவியருளும்".

இது இரண்டாவது பாடம்: கடவுள் மௌனமாக இருப்பது போல் தோன்றும்போது கைவிட்டுவிடாதீர்கள்.

என்று ஜெபிப்பது மிக ஆழமான விசுவாசம். அது பெரும்பாலும் காத்திருப்பில்தான் உருவாகிறது.

வயதான தாய் ஒருவர், தன் மகன் மீண்டும் திருச்சபைக்குத் திரும்ப வேண்டும் என்று முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஜெபித்த பிறகு இப்படிச் சொன்னார்: "ஒவ்வொரு நாளும் நான் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி, ஒரு ஜெபத்தைச் சொன்னேன். நான் கடவுளிடம், 'நீர் உமது கதவைத் திறந்து வைத்திருக்கும்வரை, நானும் என் கதவைத் திறந்து வைத்திருக்கிறேன்' என்று கூறினேன்". அவர் இறப்பதற்குச் சற்று முன்பு, அவருடைய மகன் மீண்டும் நற்கருணை வாழ்வுக்குத் திரும்பினான். விடாமுயற்சியுள்ள ஜெபம் சூழ்நிலைகளை மட்டுமல்ல இதயங்களையும் மாற்றுகிறது.

அதன்பின் மற்றொரு கடினமான சூழல் வருகிறது. தான் இஸ்ரயேல் குடும்பத்தில் காணாமற்போன ஆடுகளுக்காக மட்டுமே அனுப்பப்பட்டதாக இயேசு கூறுகிறார். மீண்டும், அந்தப் பெண் நிராகரிக்கப்பட்டது போலவே தோன்றுகிறது.

இங்கு அவளது விசுவாசத்தின் மற்றொரு வியக்கத்தக்க அம்சத்தைக் காண்கிறோம்.

அவள் கோபப்படவோ, கசப்படையவோ இல்லை. இயேசு அநீதியாக நடப்பதாக அவள் குற்றம் சாட்டவில்லை. மாறாக, கடவுளின் மறைபொருளான திட்டத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாதபோதும், அவள் அதைத் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்கிறாள். இருப்பினும், அவள் அதைவிட ஆழமான ஒன்றை நோக்கித் துணிச்சலுடன் முறையிடுகிறாள்: அதுவே கடவுளின் எல்லையற்ற இரக்கம்.

"ஆம் ஆண்டவரே, ஆனால் நாய்க்குட்டிகளும் மேஜையிலிருந்து விழும் ரொட்டித் துண்டுகளைத் தின்னுமே" என்று அவள் கூறுகிறாள்.

எவ்வளவு தாழ்மை! எவ்வளவு துணிச்சல்! எவ்வளவு நம்பிக்கை!

கடவுளுக்கு முன்னால் தமக்கு எந்த உரிமையும் தகுதியும் இல்லை என்பதை அவள் ஏற்றுக்கொள்கிறாள். எல்லாமே இறைவனின் அருள்தான். இருப்பினும், இறைவனின் இரக்கம் எவ்வளவு அபரிமிதமானது என்றால், தெய்வீக இரக்கத்தின் சிறுதுளிகளே தன் மகளைக் குணப்படுத்தப் போதுமானது என்றும் அவள் நம்புகிறாள்.

ஆயிரக்கணக்கானோர் உண்ட பிறகும்கூடைகூடையாக எஞ்சியிருந்த, அப்பங்களைப் பலுகச் செய்த அற்புதத்தைப் பற்றி ஒருவேளை அவள் கேள்விப்பட்டிருக்கலாம். ஒரு வகையில் அவள் இப்படிச் சொல்கிறாள்: "ஆண்டவரே, உமது இரக்கம் மிகவும் அபரிமிதமானது, நிச்சயமாக அதில் எனக்கும்போதுமான அளவு இருக்கும்".

இயேசுவும் வியப்புடன் பதிலளிக்கிறார்: "அம்மா, உமது விசுவாசம் பெரியது!"

இங்கு அற்புதம் என்பது மகளின் குணமடைதல் மட்டுமல்ல; அதைவிடப் பெரிய ஒன்று நடக்கிறது. ஒரு எல்லை திறக்கப்படுகிறது. இந்தப் பெண்ணின் விசுவாசத்தின் வழியாக, இயேசுவின் பணியின் எல்லை விரிவடைந்து தெளிவடைகிறது. கடவுளின் இரக்கம் மனிதகுலம் முழுவதையும் நோக்கி வெளிப்படத் தொடங்குகிறது.

நற்செய்தி முழுவதிலும், வெளி ஆட்கள் பெரும்பாலும் தங்களின் விசுவாசத்தால் மக்களை வியப்பில் ஆழ்த்துகிறார்கள்.

ஒரு உரோமை நூற்றுவர் தலைவர், சமாரிய தொழுநோயாளி, வரிதண்டுபவர்கள் மற்றும் பாவிகள். மீண்டும் மீண்டும், "மக்களை விட்டு வெளியே உள்ளவர்கள்" என்று கருதப்பட்டவர்கள் நம்பிக்கையின் மாதிரிகளாக மாறுகிறார்கள். கடவுள் நமக்குத் தெரிந்த வட்டத்திற்குள் மட்டுமே செயல்படுகிறார் என்று ஒருபோதும் நினைக்கக்கூடாது என நற்செய்தி நம்மை எச்சரிக்கிறது.

ஒரு பழைய கதை உண்டு. ஒரு துறவற மடம் அன்பற்றும், பிரிவினைகளாலும் நிறைந்துகாணப்பட்டது. துறவிகள் எப்போதும் சண்டையிட்டுக்கொண்டனர். வருகையாளர்களின் எண்ணிக்கையும் குறைந்தது. ஒருநாள், வயதான ரபி ஒருவர் அருகில் வந்தபோது, "உங்களில்ஒருவர்தான் வேடமிட்டுள்ள மெசியா (மீட்பர்)" என்று அமைதியாகக் கூறினார்.

துறவிகள் குழப்பமடைந்தனர். தினமும் அமைதியாக ஜெபிக்கும்அந்த வயதான சகோதரரா? அல்லது சமையல்காரரா? அல்லது அனைவரும் தவிர்க்கும் அந்தச் சவாலான துறவியா? படிப்படியாக அவர்கள் ஒருவரையொருவர் வித்தியாசமாக மரியாதையோடும், பொறுமையோடும், அன்போடும் நடத்தத் தொடங்கினர். காலப்போக்கில், அங்குள்ள சூழலே முற்றிலும் மாறியது. மக்கள் அங்கும் மீண்டும் அமைதியைக் கண்டு, ஜெபத்தையும் ஞானத்தையும் தேடித் திரும்பினர்.

சில நேரங்களில் நாம் சிறிதும் எதிர்பாராத இடங்களில் இறை அருள் வெளிப்படுகிறது.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் அடிகளார் கூறுகிறார்: கடவுள் "எல்லார்மீதும் இரக்கம் காட்ட விரும்புகிறார். அதுவே மீட்பின் வரலாற்று திசையாகும். கடவுள் இஸ்ரயேலில் தொடங்குகிறார், ஆனால் கிறிஸ்துவழியாக அந்த வாக்குறுதி அனைத்து நாடுகளுக்கும் மக்களுக்கும் திறக்கப்படுகிறது.

இன்று நமக்கு இந்தத் தொலைநோக்குப் பார்வை மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது.

சமீபத்திய ஆண்டுகளில், வட ஈராக்கில் உள்ள கிறிஸ்தவர்கள் கொடூரமான துன்புறுத்தல்களைச் சந்தித்தனர். பண்டைய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டனர். நூற்றாண்டுகளாக நின்ற தேவாலயங்கள் பாழடைந்தன. இருப்பினும் வன்முறைக்கு மத்தியிலும் ஒரு வியக்கத்தக்க விஷயம் நடந்தது. சில முஸ்லிம் அண்டைவீட்டார்கள் கிறிஸ்தவக் குடும்பங்களைப்

பாதுகாத்தனர், தங்கள் வீடுகளில் ஒளித்துவைத்தனர், மேலும் பகிரங்கமாக அவர்களுக்கு ஆதரவாக நின்றனர்.

பாக்தாத்தைச் சேர்ந்த ஒரு இளம் முஸ்லிம் மனிதர், கழுத்தில் சிலுவை அணிந்தபடி தனது புகைப்படத்தைப் பதிவிட்டு: "இன்று, நாம் அனைவரும் கிறிஸ்தவர்கள்" என்று எழுதினார். தான் மதம் மாறிவிட்டதாக அவர் கூறவில்லை; மாறாக, பொதுவான துன்பம் ஆழமான மனிதநேயத்தை வெளிப்படுத்தியுள்ளது என்றே கூறினார்.

இது நற்செய்தியின் வடிவத்திற்கு மிகச் சரியான சான்றாகும். இரக்கம் தடைகளைத் தகர்க்கிறது. இரக்கம் நம் அடையாளத்தை விரிவுபடுத்துகிறது. அன்பு ஒருபோதும் வெறுப்புக்கு இறுதி வார்த்தையாக இருக்க அனுமதிப்பதில்லை.

கானானியப் பெண் நமக்கு நான்கு காரியங்களைக் கற்றுத்தருகிறாள்:

முதலில், உங்கள் தேவையை இயேசுவிடம் கொண்டுவாருங்கள்.

இரண்டாவதாக, கடவுள் மௌனமாக இருப்பது போல் தோன்றும்போது அவரைக் கைவிட்டுவிடாதீர்கள்.

மூன்றாவதாக, கடவுளின் வழிகளை உங்களால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாதபோதும் அவரை நம்புங்கள்.

நான்காவதாக, மனித எல்லைகள் மற்றும் தோல்விகளைவிடப் பெரியதான கடவுளின் எல்லையற்ற இரக்கத்தை எப்போதும் மன்றாடுங்கள்.

ஒருமுறை ஆசிரியர் ஒருவர் தன் மாணவர்களிடம் கடவுளின் அன்பைப் படமாக வரையச் சொன்னார். ஒரு குழந்தை ஒரு பெரிய மேஜையை வரைந்து, அதைச் சுற்றி கூடுதல் நாற்காலிகள் சேர்க்கப்படுவது போல வரைந்தது. ஆசிரியர் ஏன் என்று கேட்டபோது, அக்குழந்தை: "ஏனெனில் கடவுள் தொடர்ந்து இடம் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்" என்று பதிலளித்தது.

அதுவே இன்றைய நற்செய்தி.

இரக்கத்தின் மேஜையில் தனக்கும் இன்னும் இடம் உண்டு என்று கானானியப் பெண் நம்பினாள். அவள் நம்பியது சரிதான் என்பதை இயேசு வெளிப்படுத்தினார்.

நாமும் இத்தகைய விடாமுயற்சி, தாழ்மை மற்றும் துணிச்சலோடு நம்பக் கற்றுக்கொண்டால், ஒருநாள் கிறிஸ்து நம்மிடமும்: "உமது விசுவாசம் பெரியது" என்று கூறுவார்.

ஆமென்

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai